தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### டெல்டா மாவட்டங்களில் மீண்டும் மழை தொடரும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




தென் மேற்கு வங்கக் கடலில் புதியதாக காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இதனால் டெல்டா மாவட்டங்களில் மீண்டும் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மேலும் கூறியுள்ளதாவது:- கடந்த வாரம் தென் மேற்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்தம் காரணமாக தென் மாவட்டங்களில் கனமழை பெய்தது. இதையடுத்து ற்போது தென் மேற்கு வங்கக் கடலில் மீண்டும் ஒரு குறைந்த காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இதனால் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்யும். தவிரவும் இன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரை பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரில் சில இடங்களில்

### ஒரே வாரத்தில் இருமடங்கான காய்கறி விலை

மழையின் காரணமாக, செடி, கொடிகளில் நோய்த் தாக்குதல் ஏற்பட்டதால், காய்கறி வரத்து குறைந்து, விலை ஒரே வாரத்தில் இரு மடங்காக உயர்ந்துள்ளது. நான்கு நாள்களுக்கு முன்பு இருந்ததை விட,

தற்போது தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய் ஆகியவற்றின் விலை சந்தையில் இருமடங்காக உயர்ந்துவிட்டது. சிறிய வெங்காயம் கிலோ ரூ.40 ஆக உயர்ந்துள்ளது. தக்காளி விலை கடந்த வாரம் ஒரு கிலோ ரூ. 15 என்ற அளவில்தான் இருந்தது. தற்போது, ரூ. 25 லிருந்து ரூ. 30 வரை கூடியிருக்கிறது. இதேபோன்று, ரூ. 20 முதல் ரூ. 25 ஆக இருந்த கத்தரிக்காய், வெண்டைக்காய் விலைகளும் ரூ. 50 ஆக உயர்ந்துவிட்டன. கேரட், உருளை, பீன்ஸ் விலைகளும் உயர்ந்தே காணப்படுகிறது. அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் இந்தக் காய்கறிகளின் விலை திடீரென உயர்ந்தது குறித்து, மாட்டுத்தாவணி அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைவர் பி. ரவிச்சந்திரனிடம் கேட்டதற்கு, ஏற்கெனவே சில நாள்களுக்கு முன்பு பெய்த மழையால் தக்காளி, கத்தரி போன்ற காய்கறிகளின் உற்பத்தி குறைந்தது. இதனால், விலை அதிகரித்து வந்தது. இந்நிலையில், கார்த்திகை சீசனை முன்னிட்டு, விவசாயிகளில் பலர் கோயில்களுக்குச் சென்றுள்ளதால், காய்கறி வரத்து குறைந்து விலை அதிகரித்திருக்கிறது. இன்னும் ஓரிரு நாள்களில் விலை குறையக்கூடும் என்றார். மழையால் செடி, கொடிகளில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் ஏற்பட்டு, காய்கறி வரத்து குறைந்துள்ளது. குறிப்பாக, முருங்கைக்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், பொதுமக்களை பாதிக்கக்கூடிய அளவில் விலை உயரவில்லை என, சங்க நிர்வாகி தியாகராஜன் தெரிவித்தார்.

## புதுச்சேரியில் கால்நடை மருத்துவ முகாம்: இன்று தொடக்கம்

புதுச்சேரி கால்நடை பராமரித்துறை சார்பில் கால்நடை மருத்துவ முகாம் திங்கள்கிழமை தொடங்குகிறது.இதுதொடர்பாக கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர் பத்மநாபன் வெளியிட்ட அறிக்கை:

வரும் பிப்ரவரி மாதம் 20-ம் தேதி வரை கால்நடை மருத்துவ முகாகம்கள் நடைபெறவுள்ளன. இதில் சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவர்கள், பங்கேற்று அனைத்து வகையான சிகிச்சைகளையும் அளிக்க உள்ளனர். குறிப்பிட்ட நாள்களில் காலை 9 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நடைபெறும். முகாம் நடைபெறும் பகுதிகள்: சிவராந்தகம் கால்நடை மருந்தகத்தில் 8-ம் தேதி மேல் சாத்தமங்கலம் கிராமம், 9-ம் தேதி சங்கரன்பேட்டை கிராமம், 10-ம் தேதி பங்கூர், 11-ம் தேதி அரியூர் கிராமங்களுக்கும் கால்நடை மருத்துவ முகாம் நடைபெறும். அரியாங்குப்பம் கால்நடை மருந்தகத்தில் 18-ம் தேதி வீராம்பட்டினம், 19-ம் தேதி நல்லவாடு, 22-ம் தேதி எடையாளபாளையம், 23-ம் தேதி டி.என்.பாளையம் கிராமங்களுக்கும் மருத்துவ முகாம் நடைபெறும். தட்டாஞ்சாவடி கால்நடை மருந்தகத்தில் 29-ம் தேதி நாவற்குளம், 30-ம் தேதி திலாஸ்பேட்டை, 31-ம் தேதி பிள்ளைச்சாவடி கிராமங்களுக்கு முகாம் நடைபெறும்.திருக்கனூர் கால்நடை மருந்தகத்தில் ஜனவரி 7-ம் தேதி செல்லிப்பட்டு, 8-ம் தேதி செட்டிப்பட்டு, 9-ம் தேதி லிங்காரெட்டிப்பாளையம், 12-ம் தேதி கைக்கிளைப்பேட்டை கிராமங்களுக்கும் முகாம் நடைபெறும். மதகடிப்பட்டு கால்நடை மருந்தகத்தில் ஜனவரி 19-ம் தேதி வாதனூர், 20-ம் தேதி கலிதீர்த்தாள்குப்பம், 21-ம் தேதி டிஏ.கோவில், 22-ம் தேதி கொத்தபுரிநத்தம், கிராமத்துக்கும் முகாம் நடைபெறும். புதுச்சேரி கால்நடை மருந்தகத்தில் ஜனவரி 27-ம் தேதி தேங்காய்திட்டு, 28-ம் தேதி வாழைக்குளம், 29-ம் தேதி கொம்பாக்கத்துக்கும், 30-ம் தேதி முருங்கப்பாக்கம் கிராமங்களுக்கும் முகாம் நடைபெறும். கரியமாணிக்கம் கால்நடை மருந்தகத்தில் வரும் பிப்ரவரி மாதம் 2-ம் தேதி கரிக்கலாம்பாக்கம், 3-ம் தேதி மடுகரை, 4-ம் தேதி கரியமாணிக்கம், 5-ம் தேதி ஏம்பலம் கிராமங்களுக்கு கால்நடை மருத்துவ முகாம் நடைபெறும்.

வில்லியனூர் கால்நடை மருந்தகத்தில் 9-ம் தேதி கூடப்பாக்கத்துக்கும், 10-ம் தேதி பெருங்களூருக்கும், 11-ம் தேதி அக்ரஹாரத்துக்கும், 12-ம் தேதி மங்களம் கிராமங்களுக்கும் மருத்துவ முகாம் நடைபெறும். பாகூர் கால்நடை மருந்தகத்தில் 17-ம் தேதி கடுவனூர் கிராமத்துக்கும், 18-ம் தேதி அரங்கனூருக்கும், 19-ம் தேதி பிள்ளையார்குப்பத்துக்கும், 20-ம் தேதி சுள்ளியாங்குப்பம் கிராமங்களுக்கும் மருத்துவ முகாம் நடைபெறும் என்றார் பத்மநாபன்.

## <u>மானிய விலையில் சிங்க் சல்பேட்: வேளாண் அதிகாரி தகவல்</u>

திருவாடானை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் நெல் நுண்ணூட்டம் மற்றும் சிங்க் சல்பேட் விநியோகம் செய்யப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் நாகராஜ் தெரிவித்தார். திருவாடானை வட்டாரத்தில் தற்பொழுது சாகுபடி செய்யபட்டுள்ள நெல் பயிர்கள் நெல் நுண்ணூட்ட சத்து பற்றாகுறையால் மஞ்சள் நிறமாகவும், பயிர் வளர்ச்சி இல்லாமலும் உள்ளது. எனவே நெல் பயிருக்கு நெல் நுண்ணூட்டம் ஏக்கருக்கு 5 கிலோ வீதமும், ஜிங்க் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ வீதமும் 50கிலோ மணலுடன் கலந்து நெல் பயிரில் இட வேண்டும். எனவே திருவாடானை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் சிங்க் சல்பேட்,நெல் நுண்ணூட்ட சத்து வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி விவசாயிகள் அதனை வாங்கி பயன் பெறுமாறு வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் விபரங்களுக்கு களப்பணியாளரை கீழ்க்கண்ட எண்களில் 04561-254080,254340 தொடர்பு கொள்ளலாம்.

## <u>மேய்ச்சல், விளை நிலங்களை பாழாக்கும் ஒட்டுண்ணித் தாவரம்</u>

காங்கயம் பகுதியில் மேய்ச்சல், விளை நிலங்களில் ஒட்டுண்ணித் தாவரம் அதிகளவில் படர்ந்துள்ள காரணத்தினால் பயிர்கள் பாழாக்கி உள்ளன.

காங்கயம் பகுதியில் ஊதியூர், தாயம்பாளையம், வட்டமலை, காடையூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விளைநிலங்கள் உள்ளன. இவற்றில் நரிப்பயறு, கொள்ளு சாகுபடி செய்கின்றனர். பெரும்பாலான விவசாயிகள் அவற்றை அப்படியே ஆடு, மாடுகளை விட்டு மேயவிடுவது வழக்கம். தற்போது இந்தப் பகுதியில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் தங்க நிறத்தில் காணப்படும் மங்கையர் கூந்தல், சடதாரி என அழைக்கப்படும் ஒரு வகை ஒட்டுண்ணித் தாவரம் பயிர்களின் மீது படர்ந்து, அவற்றின் வளர்ச்சியை முழுமையாக பாதித்துள்ளது. இதனால், கொழுக்கட்டை, நரிப்பயறு, கொள்ளு உள்ளிட்ட மானாவாரி பயறுகளின் செடிகள் முளைத்துப் படர்வது பாதிக்கப்பட்டுள்ளதால், இந்த நிலங்களில் ஆடு,மாடுகள் மேய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறியபோது, இந்த ஓட்டுண்ணித் தாவரம் விளை நிலங்களில் படர்ந்துவிட்டால் அவற்றை அகற்றுவது மிகக் கடினமான ஒன்றாகிவிடுகிறது. அதைப் பிடுங்கி எறியவும் வாய்ப்பில்லை என்பதால் என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கிறோம். விதைப்பு பருவத்தின் போது, இந்த ஒட்டுண்ணித் தாவரங்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அதனைக் களைவதற்கு வேளாண்மைத்துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றனர்.

## <u>ரேஷன் விநியோகத்துக்கு 1,179 மெட்ரிக். டன் பருப்பு ஒதுக்கீடு</u>

வேலூர் மாவட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களின் விநியோகத்துக்காக 718 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 461 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக மாவட்ட வழங்கல் துறை தெரிவித்துள்ளது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு உளுத்தம்பருப்பு மற்றும் துவரம் பருப்பு விநியோகம் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 9.33 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவர்களுக்காக 1,179 மெட்ரிக். டன் பருப்பு

வகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை வந்துள்ளன. இவை அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் என மாவட்ட வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

## தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நலத்திட்ட உதவிகள்

விளாத்திகுளம் அருகே மேலக்கரந்தையில், கீழக்கரந்தை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. கால்நடை மருந்தக வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கீழகரந்தை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கச் செயலர் ஐ. நாகமணி தலைமை வகித்தார். சங்கத்தின் கள மேலாளர் சிவா முன்னிலை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிதிஉதவி திட்டத்தின் கீழ் கீழக்கரந்தை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் 14 பயனாளிகளுக்கு ரூ.8 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் சிறு தொழில் கடனுதவிக்கான காசோலைகளையும், 3 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான 6 கறவை மாடுகளையும், 2 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பிலான 42 செம்மறி ஆடுகளையும் சங்கத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் துணைத் தலைவர் முத்துராஜ், கால்நடை மருத்துவர் மெய்யப்பன், சங்கப் பணியாளர்கள் ரவிச்சந்திரன், கிருஷ்ணசாமி, செல்வி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நெல்லை மாவட்டத்தில் 1.25 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ் பிசான பருவத்தில் நெல், சிறு தானியம் உள்ளிட்டவை 1.25 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண் துறை இணை இயக்குநர் செ.

சந்திரசேகரன் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

வடகிழக்குப் பருவ மழை வழக்கத்தை விட நிகழ் பருவத்தில் கூடுதலாக பெய்ததை அடுத்து, தாமிரவருணி பாசனத்தில் முழு அளவில் பிசான பருவ சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாசனத்துக்கு தேவையான யூரியா உரம் தட்டுப்பாடு இல்லாமல் விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் வேளாண் துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்துக்கு தேவையான யூரியா உரம் 7 ஆவது கட்டமாக ஞாயிற்றுக்கிழமை காரைக்கால் துறைமுகத்திலிருந்து ரயில் மூலம் கொண்டு வரப்பட்டது. 2,651 மெட்ரிக் டன் உரம் கொண்டு வரப்பட்டதில், திருநெல்வேலி மாவட்டத்துக்கு 1,000 மெட்ரிக் டன்னும், தூத்துக்குடி மாவட்டத்துக்கு 1,300 மெட்ரிக் டன்னும், கன்னியாகுமரி மாவட்டத்துக்கு 351 மெட்ரிக் டன் உரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 1,000 மெட்ரிக் டன் யூரியாவை, மாவட்டத்தில் உள்ள 163 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு மூடை ஒன்றுக்கு ரூ. 270.50-க்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யூரியா உரம் தட்டுப்பாடு முழுமையாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிகழ் பிசான பருவத்தில் 65 ஆயிரம் ஹெக்டேரில் நெல், 18 ஆயிரம் ஹெக்டேரில் பயறு வகைகள், 5 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி, 8 ஆயிரம் ஹெக்டேரில் சிறு தானிய பயிர்கள் உள்பட 1.25 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றார் அவர். பேட்டியின்போது, திருநெல்வேலி வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) இரா. கஜேந்திரபாண்டியன், மண்டல மேலாளர் பாலகிருஷ்ணன், வேளாண் அலுவலர் கற்பகராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாட்டு தொழுவமான கதிரடிக்கும் நெற்களம்

வாலாஜாபாத்: சிட்டியம்பாக்கம் கிராமத்தில், விவசாயத்திற்கு கட்டிக் கொடுக்கப்பட்ட நெற்களம், மாடு கட்டும் தொழுவமாகவும், கட்டுமானப் பொருட்களை இருப்பு வைக்கும் இடமாகவும் மாறி வருவது, விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. காஞ்சிபுரம் அடுத்த சிட்டியம்பாக்கம் கிராமத்தில், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன், 2 லட்சம் ரூபாய் செலவில், நெற்களம் கட்டிக் கொடுக்கப்பட்டது. விவசாயிகள், இந்த நெற்களத்தை கதிரடிக்கவும், வைக்கோலை காய வைக்கவும் பயன்படுத்தி வந்தனர். இந்த நெற்களம், கிராமத்திற்கு நடுவே இருப்பதால், பகுதிவாசிகள் சிலர் ஆக்கிரமித்து, மாடு கட்டுவதற்கும், ஜல்லி கொட்டி இருப்பு வைப்பதற்கும் பயன்படுத்தி வருகின்றனர். இது, விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. எனவே, நெற்களத்தில் உள்ள கால்நடை கழிவுகள், கட்டுமானப் பொருட்களை அகற்ற, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அப்பகுதி விவசாயிகள் எதிர்பார்த்து வருகின்றனர்.

### வீரிய ரக காய்கறி விதைகள் வழங்கல்

கண்டமங்கலம்: கண்டமங்கலம் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில் மானிய விலையில் இடுபொருட்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது.தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் வீராசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய சேர்மன் சர்மிளா தேவி நெடுஞ்செழியன், ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் ராமதாஸ், வட்டார வேளாண்மை உதவி

இயக் குனர் வேல் முன்னிலை வகித்தனர். வட்டார தோட்டக்கலை அலுவலர் முருகன் வரவேற்றார். எம்.எல்.ஏ., ஜானகிராமன், மாவட்ட திட்ட இயக் குனர் ராதா ஆகியோர் விவசாயிகளுக்கு காய்கறி விதைகள், இடுபொருட்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கி பேசினர். பி.டி.ஓ.,க்கள் ரவிச்சந்திரன், அன்பழகன், சிறுவந்தாடு கூட்டுறவு சங்க தலைவர் நெடுஞ்செழியன், ஒன்றிய அ.தி.மு.க., துணை செயலாளர் ஏழுமலை, துணை சேர்மன் சீத்தாராமன், மஞ்சு, அருள்பாபு, சிவானந்தம், அர்ச்சுணன், சிவாஜி, பார்த்திபன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## பூத்துக்குலுங்கும் தர்பை செடிகள்

அவலூர்பேட்டை: கன்னலம் கிராமத்தில் விவசாய நிலத்திலுள்ள கிணற்றை சுற்றிலும் மகத்துவ மிக்க தர்பை செடிகளில் பூக்கள் அதிகளவில் பூத்துக் குலுங்குகின்றன. அனைத்து விஷேசங்களில் தர்பை செடி புற்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிறப்பு மிக்க தர்பை செடிகள் கன்னலம், அவலூர்பேட்டை உள்ளிட்ட சில கிராமங்களில் பரவலாக காணப்படுகின்றன. இச்செடிகளில் பூக்கள் அதிகமாக பூத்து குலுங்குகின்றன. பசுமை நிறைந்த நெல் வயல்களுக்கிடையே வெள்ளை நிறத்தினாலான தர்பை பூக்கள் உயர்ந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாக காணப்படுகின்றது.

## ரூ.19.75 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

ஆத்தூர் : ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த, மஞ்சள் ஏலத்தில், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கடலூர், நைனார்பாளையம், பெரம்பலூர் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 35 விவசாயிகள் விளைவித்த, 550 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு, கொண்டு வந்தனர்.இதில், விரலி மஞ்சள் குவிண்டால், 4,501 ரூபாய் முதல் 7,499 ரூபாய் வரை, உருண்டை மஞ்சள்

குவிண்டால், 4,012 ரூபாய் முதல் 7,115 ரூபாய் வரை, பனங்காலி மஞ்சள் குவிண்டால், 9,500 ரூபாய் முதல் 13,200 ரூபாய் வரை விற்பனை யானது. ஏலத்தில், ஒன்பது வியாபாரிகள் கலந்து கொண்டு, 550 மூட்டை மஞ்சளை, 19.75 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## ஜிப்சம் உரம் பயன்படுத்தஅறிவுறுத்தல்

ராசிபுரம் : "நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள், ஜிப்சம் உரத்தை பயன்படுத்தி, அதிக மகசூல் பெற்று வருமானம் பெறலாம்' என, புதுச்சத்திரம் வேளாண் உதவி இயக்குனர் ராஜகோபால் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:புதுச்சத்திரம் யூனியனுக்கு உட்பட்ட பகுதிகளில், நிலக்கடலை பயிர் பரவலாக விதைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாகுபடி செய்த நிலக்கடலை பயிர் விதைத்த, 45வது நாளில், களை எடுக்க வேண்டும். தொடர்ந்து, ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் உரம் இட்டு மண் அணைக்க வேண்டும். அதில், சுண்ணாம்பு மற்றும் கந்தகச் சத்து கிடைத்து, காய்கள் பொக்கு இல்லாமல் திரட்சியாகவும், கூடுதல் எண்ணெய் சத்துடன் அதிக எடையுடன் இருக்கும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## குறைந்த முதலீட்டில் கூடுதல் லாபம்; சூரியகாந்தி சாகுபடியில் ஆர்வம்

அந்தியூர் : அந்தியூர் அடுத்த எண்ணமங்கலம், சங்கராப்பாளையம், வெள்ளித்திருப்பூர் அடுத்த புரவிபாளையம் ஆகிய பகுதியில், குறைந்த அளவு தண்ணீரில், 90 நாட்களில் மகசூல் கொடுக்கும் சூரியகாந்தி சாகுபடி செய்து வருகின்றனர். இரண்டு கிலோ எடை கொண்ட ஒரு விதைப்பாக்கெட்டின் விலை, 1,250 ரூபாய். ஒரு ஏக்கருக்கு, அதிக படியாக இரண்டு கிலோ விதை போதுமானது. நிலத்தை உழவு செய்து, தயார் படுத்தி, ஒரு அடி இடைவெளியில், விதையை நேரடியாக நடவு செய்கின்றனர்.வேளாண் இடுபொருள்கள் மற்றும் ஆட்கள் கூலி என

அறுவடை செய்வது வரை, ஏக்கருக்கு, பத்தாயிரம் ரூபாய் முதலீடு செய்கின்றனர். சூரியகாந்தியில் காவேரி, சின்சிண்டா என இரண்டு ரகம் உள்ளன.காவேரி விதை சாகுபடி செய்த, 85 நாளில், அறுவடைக்கு தயாராகி விடுகிறது. சின்சிண்டா ரகம், 90 நாளில் அறுவடை செய்கின்றனர். குறைந்த அளவு தண்ணீரே போதுமானது. ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சமாக, 750 கிலோவில் இருந்து, 1,000 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. கிலோ, 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.நன்கு விளைச்சல் கொடுத்தால், ஏக்கருக்கு, 35 ஆயிரம் வரையில் வருவாய் கிடைக்கிறது. முதலீடு, பத்தாயிரம் ரூபாய் நீங்கலாக, 25 ஆயிரம் ரூபாய் லாபம் பெறலாம். மழை நீர் சூரியகாந்தி பூக்களின் மகரந்தம் மீது பட்டால், விளைச்சல் பாதிக்கும் என்பதால், மழை சீஸன் தவிர்த்து, எப்போது வேண்டுமானாலும் சாகுபடி செய்யலாம். வெள்ளித்திருப்பூர் அடுத்த புரவிபாளையம் பகுதியில் சூரியகாந்தி சாகுபடி செய்யும் விவசாயி செந்தில் கூறியதாவது:குறைந்த நாட்களில், குறைந்த அளவு தண்ணீரில், குறைந்த முதலீட்டில், நல்ல லாபம் கொடுக்கும் சூரியகாந்தி செடிகளை, விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்கின்றனர். பெரிய இழப்பு ஏற்படாது, என்றார்.

## குறுகிய கால பயிரில் பூச்சி தாக்குதல்

திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு சம்பா சாகுபடி அமோக விளைச்சல் தரும் நிலையில் உள்ளது. குறுகிய கால பயிரில், பூச்சி தாக்குதல் ஏற்பட்டு உள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். காவிரி டெல்டா சாகுபடி பாசனத்திற்காக, ஆகஸ்ட், 10ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த, ஐந்து ஆண்டுகளாக டெல்டா மாவட்டங்களில், நேரடி விதைப்பில் நெல் சாகுபடி அதிகரித்துள்ளது. நடப்பாண்டு, ஆற்றில் தண்ணீர் வரும் முன்பே, நேரடி விதைப்பு செய்யப்பட்ட பகுதிகளில், பயிர்கள் வளர்ந்து

கதிர் பிடிக்கும் பருவத்தில் உள்ளது. வடகிழக்கு பருவமழை சரியான நேரத்தில் தொடங்கி, ஓரளவு பெய்ததால், பயிர்கள் நன்றாக வளரத் தொடங்கியது. தற்போது, விட்டு விட்டு மழை பெய்து வருவதால், பயிருக்கு தேவையான நைட்ரஜன் அதிக அளவில் கிடைப்பதால், பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளது. குறுகிய கால பயிர்களான டி.கே.எம். 9 ரகத்தில், கதிர் முழுமையாக வெளிவர தொடங்கியுள்ளது. குறுகிய கால பயிரில், பூச்சி தாக்குதல் ஏற்பட்டு உள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சாகுபடி பரப்பில், 30 சதவீதம் சன்னரகம், பி.பி.டி., ரகம் பயிரிடப்பட்டுள்ளது. இதில் பூச்சிதாக்குதல் தென்படுவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 5,000 ஏக்கரில் சம்பா சாகுபடியும், 64 ஆயிரத்து, 908 ஏக்கரில் தாளடி சாகுபடியும் நடைபெற்றுள்ளது. திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் வளவனாறு, மரைக்கா கோறையாறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில், தண்ணீர் தேங்காமல் முன் கூட்டியே உரிய நடவடிக்கை மேற்கொண்டதாலும், மேட்டூர் அணை மூடப்பட்டதாலும், வெள்ள அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது.

## இலை சுருட்டு புழு தாக்குதல் வேளாண் அலுவலர் அறிவுரை

வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதியில் கரியாபட்டினம், வாய்மேடு, ஆயக்காரன்புலம், மருதூர், செம்போடை, தேத்தாக்குடி, தலைஞாயிறு உள்ளிட்ட பகுதிகளில், 12 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் மானாவரியாக ஆடுதுறை 38, 39, 45, சாவித்திரி, கோ-43, பி.பி.டி, ஐ.ஆர்-20, சொர்ணா போன்ற நெல் வகைகளும், மழையை தாங்கி வளரக்கூடிய கார்நெல் வகைகளும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அக்டோபர், 18ம் தேதி துவங்கி இதுவரை, 69 செ.மீ., வட கிழக்கு பருவமழை பெய்துள்ள நிலையில் கடந்த, 4 நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படுவதாலும் விட்டு,

விட்டு மழை பெய்து வருவதாலும் சம்பா பருவத்தில் சாகுபடி செய்த நெல்லில் இலைசுருட்டு புழு தாக்கி உள்ளது. இதனை கட்டுப்படுத்த புரோப்பனஸ்பாஸ், 400.மி.லி., மானோகொரோட்டோபோஸ் 400 மி.லி., குளோரினோ பைபாஸ் 600 மி.லி., இதில் ஏதாவது ஒன்றை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். மேலும், மழை நின்றவுடன், ஒரு ஏக்கருக்கு, 22 கிலோ யூரியா, 4 கிலோ வேப்பம்புண்ணாக்கு, 18 கிலோ ஜிப்சம், 17 கிலோ பொட்டாஸ் ஆகியவற்றை கலந்து தெளிக்க வேண்டும், என வேதாரண்யம் வேளாண்மை உதவி இயக்குனர் தாமோதரக்கண்ணன் அறிவுரை வழங்கியுள்ளார்.

## மாவட்டத்தில் 73,464 எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் 73,464 எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கொத்தப்புள்ளி, காமாட்சிபுரம், மெய்ஞானபுரம் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்ட தோட்டப்பயிர்களை கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்தார். பின் அவர் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் மலை பகுதிகள் குளிராகவும், மற்ற பகுதிகள் வெப்பமாகவும் உள் ளன. இதனால் அனைத்து தோட்டக்கலை பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. மாவட்டத்தில் வாழை, சப்போட்டா, நெல்லி, மா, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழ வகைகள் 34,351 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், வெங்காயம்ல முருங்கை, உருளை போன்ற காய்கறிகள் 14,612 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மல்லிகை, முல்லை, கனகாம்பரம், ரோஜா, சம்பங்கி உள்ளிட்ட மலர் பயிர்கள் 4,022 எக்டேர், காபி, கொக்கோ, பாக்கு போன்ற மலைபயிர்கள் 10,854 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மிளகு, ஏலம், பூண்டு போன்ற வாசனை பயிர்கள் 7,428 எக்டேர், கண்வலிகிழங்கு, கோலியஸ், ரோஸ்மேரி

போன்ற மருத்துவ பயிர்கள் 2,017 எக்டேர் என, மொத்தம் 73,464 எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தோட்டக்கலைத்துறை திட்டங்கள் மூலம் இந்த ஆண்டு 6,607 விவசாயிகளுக்கு ரூ.13.94 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2014-15 ல் ரூ.19.30 கோடி மானியம் வழங்கப்பட உள்ளது, என்றார். தோட்டக்கலை துணை இயக்குனர் ராமநாதன், உதவி இயக்குனர் கிஷோர்குமார், தோட்டக்கலை அலுவலர்கள் பெருமாள்சாமி, சென்றாயன் உடனிருந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வாழையில் வாடல் நோய் தாக்குதலால் மகசூல் இழப்பு கட்டுப்படுத்த ஆராய்ச்சிமையம்வழிகாட்டல்</u>**

திருச்சி,: தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் பெரும்பாலான வாழை வயல்களில் மழைநீர் தேங்கி இருப்பதோடு காற்றின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. மேலும் பனிப்பொழிவு தொடங்கி இருப்ப தால் வாழையில், வாடல் நோய் மற்றும் இலைப்புள்ளி என்ற மட்டைக் காய்ச்சல் நோய் மிக அதிக மாகி மகசூல் இழப்பு ஏற்ப டும் வாய்ப்பு அதிகமாகியுள்ளது. வாடல் நோய், ரஸ் தாளி, நெய்பூவன், மொந் தன், கற்பூரவள்ளி உள் ளிட்ட ரக வாழைப்பயி ரில் மிக அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது. நடவு கன் றுகள், மண் மற்றும் தண் ணீர் மூல மாக பரவக்கூடிய இந்நோயானது, மழைத் தண்ணீர் 2 அல்லது 3 நாட் கள் வாழை வயல்களில் தேங் கும் பொழுது வாழை வேர் கள் பாதிக்கப்படுகிறது. இதனால் மரங்களின் இலை கள் முழுவதும் வாடி, பெரும் மகசூல் இழப்பு ஏற் பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இது குறித்து திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குனர் முஸ்தபா கூறுகையில், இந்நோயை கட்டுப்படுத்த முதலில் வயல்களில்

தேங்கியுள்ள தண்ணீர் முழுவதையும் வடி கட்டத் தேவையான, வடி கால் வசதி களை உடனடி யாக ஏற்படுத்த வேண்டும். பின் னர் கார்பென்டா சிம் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து, அனை த்து வாழை மரங்களு க்கும், ஒரு மரத்திற்கு 2 அல் லது 3 லிட்டர் மருந்து கலவை என்ற அளவில், ஒரு மாத இடை வெளியில், 2அல்லது 3 முறை மரத்தைச் சுற்றி ஊற்ற வேண்டும். இது வாழை இலைகளில் அதிகப்படியான புள்ளி களை ஏற்படுத்தி, காய்கள் வளர்ச்சி அடைவதற்கு மிகவும் தேவையான பச்சை இலை களின் எண்ணிக்கை குறைப்பதால், 50 சதவீதத்திற்கும் மேலான மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயை மிக எளி தாக கட்டுப்படுத்த அவ்வப்போது இலைப்புள்ளி நோய் தாக்கப்பட்ட அடி இலைகளை நீக்கி, உடன் தீ வைத்து அழிக்க வேண் டும். 20 நாட்களு க்கு ஒரு முறை மரத்தின் அனை த்து இலைகளி லும் மற்றும் இலைக ளின் மேல் மற் றும் கீழ்ப்புறம் நன்கு நனையு மாறு தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண் டிய மருந்துகளில், முதல்தெளிப்பில் பனோல் எண் ணெய் 10மில்லி மற்றும் புரோப்பிகோனசோல் 1 மில்லியும், 2வது தெளிப்பு பனோல் எண் ணெய் 10 மில்லி மற்றும் கார்பென்டாசிம் 1கிராம்,3ம் தெளிப்பு பனோல் எண்ணெய் 10மில்லி மற்றும் நேட்டிவோ 1கிராம், 4ம்தெளிப்பு பனோல் எண்ணெய் 10 மில்லி மற்றும் புரோப்பி கோனசோல் 1 மில்லி, 5ம் தெளிப்பில் பனோல் எண் ணெய் 10 மில்லி மற்றும் கம்பேனியன் 1கிராம் ஆகும். இதை கடைபிடிப்பதன் மூலம், வாழையில் வாடல் மற்றும் இலைப் புள்ளி நோய்களை கட்டுப்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்றார்.

**லால்குடி வட்டாரத்தில் சம்பா, தாளடி, நெற்பயிரில் இலை சுருட்டுபுழு தாக்குதல்கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி வழிகாட்டல்**

திருச்சி,: வளர்ச்சி பருவத்தில் தயார் நிலையில் பயிர்கள் இருக்கும் நேரத் தில் இலை சுருட்டு புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் துறை

ஆலோ சனை வழங்கியுள்ளது. திருச்சி மாவட்டம் லால்குடி வட்டாரத்தில் சம்பா மற்றும் தாளடி, நெல் பயிர் நடவு முடிவடைந்து வளர்ச்சி பருவத் தில் உள்ளது. தற்போது 30 நாள் பயிராக உள்ள இவ ற்றில் ஆங்கரை, ஆதிகுடி, சிறுதையூர், திருமங்கலம், அரியூர், கோமாகுடி, டி.கல்விக்குடி, நத்தமாங்குடி, தாளக்குடி, கீழப்பெருங் காவூர், கீரமங்கலம் ஆகிய கிராமங் களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள 1,150 ஹெக்டேரில் இலைப்பேன், குருத்துப்பூச்சி மற்றும் இலை சுருட்டு புழுவின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு உட்பட்டு தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்துவது குறித்து லால்குடி வட்டார வேளாண் உதவி இயக்குனர் மரியரவி ஜெயக்குமார் கூறுகையில்: பூச்சி தாக்குதலில் குருத்துபூச்சி தாக்கிய நெற் பயிரில் நடு குருத்தினை இப்பூச்சி துளைப்பதால் குருத்து மேலிருந்து கீழே மஞ்சள் நிறமாக மாறி விடுகிறது. சில நாட்களில் குருத்து முற்றிலும் காய்ந்து இருந் தால் கையோடு வந்து விடும். இலை சுருட்டு புழு தாக்கினால் இலைகள் சுருட்டப்பட்டு உள்ளே புழு காணப்படும். இலைக ளில் வெள்ளை நிற பட் டைகள் காணப்படும். அதி கம் பாதித்த வயல்களில் கண்ணாடி இலை போன்று தென்படும். இலைப்பேன் தாக்குதல் ஏற்பட்டால் இலைகளில் சாறு உறுஞ்சப்படுவதால் மஞ்சள் நிற மாக இலைகள் மாறி விடும். மேலும் தற்போது அதிக மேகமூட்டம் மற்றும் காற் றில் அதிக ஈரப்பதம் உள்ள சூழ்நிலை நிலவுவதால் இப்பூச்சிகள் அதிக அளவில் பெருகும் சூழல் உள்ளது. அருகாமையில் உள்ள கிராமங்களுக்கும் இத்தாக்குதல் பரவ வாய்ப்புள்ளது. பொருளா தார சேத நிலை க்கு மேல் இப்பூச்சிகள் தாக்குதல் தென்பட்டால் குருணை மருந்துகளில் ஏதேனும் ஒன்றை மண் ணில் இட வேண்டும். அல்லது தெளிக்கும் மருந்துகளில் ப்ளூபென்டைய மைட் 70 மிலி, இன்டாக்ஸாகார்ப் 14.5 மிலி, பிப் ரோனில் 400மிலி இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தை தெளிப்பானுக்கு தக்கவாறு நீரில் கலந்து தெளிக்க வேண்டும்என்றார்.

## சுருள்பாசி வளர்ப்பு பயிற்சி

நீடாமங்கலம்,: நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சுருள்பாசி வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டப்பட்ட உணவு தயாரித்தல் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை நிலைய உதவி பேராசிரியர் (உணவியல்) கவிதாஸ்ரீ தொடங்கி வைத்தார். சுருள் பாசி உற்பத்தி செய்வது மற்றும் மதிப்புக் கூட்டிய உணவுப் பொருள் களை தயாரிப்பது பற்றி விளக்கப்பட்டது. மாத் திரை உள்பட பல வடிவங்களில் இப்பாசி விற்பனை செய்யப்படுகிறது. இந்த பாசியை தூள் செய்து பழச்சாறுடன் கலந்து குளிர்பானமாக குடிக்கலாம் என்று விளக்கப்பட்டது.

## பயறு மகசூலை அதிகரிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறை

திண்டுக்கல், : பயறு சாகுபடியில் அதிக மகசூ லை பெறுவதற்கு வேளாண் அதிகாரிகள் தெரிவித்து ள்ள தொழில்நுட்பங்கள் வருமாறு: பயறு வகைகளில் மகசூல் அதிகரிக்க 2 சதவீத டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும். இதன்படி, ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 10 லிட்டர் சுத்த மான நல்ல தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வை க்க வேண்டும். பின்பு கா லையில் நன்றாக தெளிந்து மேலாக இருக்கும் தண்ணீ ரை வடிகட்ட வேண்டும். சுமார் 8 லிட்டர் கரைசல் கிடைக்கும். அதை 192 லிட் டர் சுத்தமான நல்ல தண் ணீரில் கலந்து கைத்தெளிப் பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த கரைசலை பூக்கும் சமயத்தில் ஒரு முறையும் காய் பிடிக்கும் தருணத்தில் மறுமுறையும் காலை அல் லது மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் கொ ண்டு தெளிக்க வேண்டும். இதன் மூலம் அதிக அளவில் பூக் கள் ஒரே சீராக பூக்கும். மே லும் காய்கள் திரட்சியாக காய்க்கும். 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும். கரைசலை வெ யில் நேரத்தில் தெளித் தால் எதிர்பார்த்த பயன் கிடை க்காது. பயறு வகை பயிர்களில் பூக்கின்ற பூக்களில் 25 சத வீதம் காய்களாக மாறுகின் றன. பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை, கடுமை

யான வறட்சி, நீர் தேங்குதல், காற்றின் வேகம் அதிகமாக இருத்தல் போன்ற காரண ங்களால் பூக்கள் அதிகமாக உதிர்கின்றன. இதனை தடுக்க பயிர் ஊக்கியான நாப்தலின் அசிட்டிக் அமில த்தை பயிர்களில் தெளிக்க வேண்டும். இக்கரைசலை தயாரிக்க 1.6மிலி பிளானோபிக்ஸ் மருந்தினை 1.8 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 100 லிட்டர் கரைசல் தேவைப்படும். இக்கரை சலை பூக்கும் தருணத்திலும் 15 நாட்களுக்குப் பின் மறுமுறையும் தெளிக்க வேண்டும். பூக்கள் உதிர்வ தை தடுப்பதினால் 10 முதல் 20 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். மேலும் பயறு வகை பயி ர்களில் உற்பத்தியை பெரு க்க நெல்லுக்குப்பின் தனிப்பயிராகவோ மற்றும் இதரப்பயிர்களில் வரப்பு பயி ராகவோ சாகுபடி செய்து உபரி வருமா னம் பெறலாம். இவ்வாறு வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள்

பழநி, : விவசாயிகளு க்கு மானிய விலை யில் விதைகள் வழங்கப்படுவ தாக வேளாண்துறையி னர் அறிவித்துள்ளனர். பழநி பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக விவசாயிகள் தங்களது நிலங் களை உழுகும் பணியில் ஈடுபட்டுள்ளனர். விதை ப்பிற்கு தேவை யான விதைகள் வேளாண்மை த்துறை சார்பில் மானிய விலையில் வழங்கப்படுகி ன்றன. இதுகுறித்து பழநி வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது: நெல் விதைப்பில் ஈடு படும் விவசாயிகளுக்கு கோ-43, ஏ.டி.பி-39, வகை நெல் விதைகள் வே ளாண்மைத்துறையால் வழங்கப்படுகின்றன. இவற்றிற்கு கிலோ ஒன்றி ற்கு ரூ.5 மானியமாக வழ ங்கப்படுகிறது. உளுந்து, தட்டை மற்றும் பாசிப்பயிறு வகை விதைகளு க்கு கிலோவிற்கு ரூ.12 மானியமாக வழங்கப்படுகிறது. நெல் விவசாயம் செய்யும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையினை கடைபிடித்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அருகில் உள்ள

வேளாண்மை விரி வாக்க மையத்தை அணுக லாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## <u>பயறு மகசூலை அதிகரிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறை வேளாண்துறையினர் ஆலோசனை</u>

திண்டுக்கல், : பயறு சாகுபடியில் அதிக மகசூ லை பெறுவதற்கு வேளாண் அதிகாரிகள் தெரிவித்து ள்ள தொழில்நுட்பங்கள் வருமாறு: பயறு வகைகளில் மகசூல் அதிகரிக்க 2 சதவீத டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும். இதன்படி, ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 10 லிட்டர் சுத்த மான நல்ல தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வை க்க வேண்டும். பின்பு கா லையில் நன்றாக தெளிந்து மேலாக இருக்கும் தண்ணீ ரை வடிகட்ட வேண்டும். சுமார் 8 லிட்டர் கரைசல் கிடைக்கும். அதை 192 லிட் டர் சுத்தமான நல்ல தண் ணீரில் கலந்து கைத்தெளிப் பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த கரைசலை பூக்கும் சமயத்தில் ஒரு முறையும் காய் பிடிக்கும் தருணத்தில் மறுமுறையும் காலை அல் லது மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் கொ ண்டு தெளிக்க வேண்டும். இதன் மூலம் அதிக அளவில் பூக் கள் ஒரே சீராக பூக்கும். மே லும் காய்கள் திரட்சியாக காய்க்கும். 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும். கரைசலை வெ யில் நேரத்தில் தெளித் தால் எதிர்பார்த்த பயன் கிடை க்காது. பயறு வகை பயிர்களில் பூக்கின்ற பூக்களில் 25 சத வீதம் காய்களாக மாறுகின் றன. பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை, கடுமை யான வறட்சி, நீர் தேங்குதல், காற்றின் வேகம் அதிகமாக இருத்தல் போன்ற காரண ங்களால் பூக்கள் அதிகமாக உதிர்கின்றன. இதனை தடுக்க பயிர் ஊக்கியான நாப்தலின் அசிட்டிக் அமில த்தை பயிர்களில் தெளிக்க வேண்டும். இக்கரைசலை தயாரிக்க 1.6மிலி பிளானோபிக்ஸ் மருந்தினை 1.8 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 100 லிட்டர் கரைசல் தேவைப்படும். இக்கரை சலை பூக்கும் தருணத்திலும் 15 நாட்களுக்குப் பின் மறுமுறையும் தெளிக்க வேண்டும். பூக்கள் உதிர்வ

தை தடுப்பதினால் 10 முதல் 20 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். மேலும் பயறு வகை பயி ர்களில் உற்பத்தியை பெரு க்க நெல்லுக்குப்பின் தனிப்பயிராகவோ மற்றும் இதரப்பயிர்களில் வரப்பு பயி ராகவோ சாகுபடி செய்து உபரி வருமா னம் பெறலாம். இவ்வாறு வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>சிவகங்கை பகுதியில் பொங்கலுக்கு தயாராகும் செங்கரும்பு</u>

சிவகங்கை, : சிவகங்கை பகுதியில் பொங்கலுக்கு விற்கப்படும் வகையில் செங்கரும்புகள் தயாராகி வருகின்றன. ஆண்டு தோறும் தை மாதம் வருடப்பிறப்பன்று பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப் படுகிறது. விவசாயத்தை அடிப்படை யாக கொண்டு தோன்றிய இப்பண்டிகையில் கரும்புக்கு தனி முக்கியத்துவம் உண்டு. பொங்கல் பண்டிகைக்கு விற்பனை செய்யும் வகையில் சிவகங்கை அருகே சாலூர், மலம்பட்டி, சிவல்பட்டி, சானிப்பட்டி, பெருமாள்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் செங்கரும்புகள் விளைவிக்கப்படுகின்றது. பல்வேறு வகையான வெள்ளம் தயாரிப்பது, பொங்கல் பண்டிகைக்கு விற்பனை செய்யப்படுவது உள்ளிட்ட தேவைகளுக்கே இந்த வகை கரும்புகள் பயன்படும். தை மாதம் பொங்கல் பண்டிகை முடிந்தவுடன் அடுத்த பொங்கலுக்கான கரும்பு நடவு தொடங்கி விடுகிறது. தை மற்றும், மாசி மாதங்களில் கரும்பின் கரணை(வேர்ப்பகுதி) நடப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. 10மாதங்களில் முழுமையாக வளர்ந்து கரும்புகள் அறுவடைக்கு தயாராகின்றன. இப்பகுதியில் மழையை நம்பாமல் கிணற்று பாசனம் மூலமே கரும்பை விளைவிக்கின்றனர். சிவகங்கை மாவட்டம் மட்டுமின்றி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர் உள்பட தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு இப்பகுதியிலிருந்து கரும்பு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இது குறித்து சாலூர் விவசாயிகள் கூறுகையில், மாவட்டத்தில் இப்பகுதியில் மட்டுமே செங்கரும்பு விளைவிக்கப்படுகிறது. பிற பகுதிகளில் ஆலைக்கரும்புகளே

பயிரிடுகின்றனர். ஆட்கள் பற்றாக்குறை, உரம், மருந்து விலை உயர்வு உள்ளிட்ட காரணத்தால் அதிகப்படியான செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. கடந்த ஆண்டு ஒரு வண்டி கரும்பு(30கட்டு), ரூபாய் 3ஆயிரத்து 500வரை விற்பனை செய்தோம். இந்த ஆண்டு மழையால் விளைச்சல் நல்லபடியாக உள்ளது. தற்போது உற்பத்தி செலவு அதிகமாகியுள்ளதால் கூடுதல் விலைக்கு விற்றால் மட்டுமே கட்டுபடியாகும். இப்பகுதியில் கரும்பு கத்தரி, வெண்டை, முள்ளங்கி, மிளகாய், தக்காளி உள்பட ஏராளமான காய்கறி வகைகள் விளைவிக்கப்படுகின்றன. இங்கு அரசு சார்பில் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்ய வேண்டும் என்றனர்.

**விவசாய பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதல்**

உடுமலை, : உடுமலையில் சமீபத்தில் பெய்த கன மழை காரணமாக விவசாயிகள் பருத்தி, நிலக்கடலை, எள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். பருவநிலை மாற்றத்தால் தற்போது இந்த பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதல் தென்படுகிறது. இளம்சிவப்பு, கருநீலம், மஞ்சள் நிறங்களில் உள்ள இந்த பூச்சிகள் தென்பட்டால் உடனே அது குடிகொண்டிருக்கும் பயிர்களை அழித்து விட வேண்டும். நிலத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மாவுப் பூச்சியை அழிக்க வேப்பெண்ணெய் 2 சதவீதம், வேப்பங்கொட்டை பருப்பு 5 சதவீதம், மீன் எண்ணெய், ரேசின்சோப் இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் அளவு சேர்த்து கரைத்து தெளிக்க வேண்டுமென தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கரூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு நீலநாக்குநோய் அதிகாரிகள் ஆய்வில் தகவல்**

கரூர், : கரூர் மாவட்டத்தில் கால்நடைகளை நீலநாக்குநோய் தாக்கியது ஆய்வில் தெரியவந்துள்ளது. தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கரூர் மாவட்டத்தில் ஆடு,

மாடுகளுக்கு நீலநாக்குநோய் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர். இதுதொடர்பாக கால்நடை துறை சார்பில் பரிசோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பரிசோதனை ஆய்வு முடிவுகள் வந்துள்ளது. இந்த பரிசோதனையில் கால்நடைகளை நீலநாக்கு நோய் தாக்கியது உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் கால்நடை பராமரிப்புதுறையினர் கூறியதாவது: கால்நடைகளை தாக் கும் நச்சுயிரி நோய்களில் முக்கியமானது நீலநாக்குநோய். செம்மறியாடுகளை அதிகஅளவில் தாக்குகிறது, மழைக்காலங்களில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இந்நோய் அதிகம் காணப்படுகிறது. காய்ச்சல் அதிகமாக இருப்பது, மூக்கில்சளி, வாய், உதடு, ஈறு, நாக்கு ஆகிய இடங்களில் புண், சிவப்புநிறத்துடன் காணப்படும். கழுத்து ஒருபக்கமாக சாய்ந்து, கால்குழம்புகளிடையே புண்களில் முடி கொத்துகொத்தாக கொட் டும். கழிச்சல் இருக்கும். தடுப்பு முறைகள்: நோய்கண்ட ஆடுகளுக்கு சிறிதளவு அரிசி, கம்பு, கேழ்வரகு, ஆகியவற்றில் கஞ்சிகாய்ச்சி கொடுக்க வேண்டும். மேய்ச் சலுக்கு விடக்கூடாது. வாய்புண்களுக்கு உப்புதண்ணீர் அல்லது ஒருகிராம் பொட்டாசியம் பர்மாங்கனேட் கலந்தநீரில் ஒருநாளைக்கு 2அல்லது 3முறை கழுவ வேண்டும். பின்பு கிளிசரின் அல்லது விலங்கு நெய் தடவலாம். நோய் பரவாமல் இருக்க ஈ. கொசுக்களை பூச்சிக்கொல்லி மருந்து, ஒட் டுண்ணி நீக்கி மருந்துகளை அடித்து தடுக்கலாம். அருகில் உள்ள கால்நடை உதவிமருத்துவர் அறிவுரையின்படி நுண்ணுயிர் கொல்லி அல்லது நோய்க்குண்டான சிகிச்சை பெறலாம். நோய் தாக்கும் காலங்களில் தடுப்பூசிபோடவேண்டும் என்றனர்.

## <u>பூச்சிக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் விற்பனை</u>

அறந்தாங்கி, : அறந்தாங்கி வட்டாரத்தில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்துகள்

விற்பனை செய்யப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் பொன் னையா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்ட செய்திக்குறிப்பு: அறந்தாங்கி வட்டாரத்தில் தற்போது சம்பா நெல் சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. மேலும், வானம் மேக மூட்டத்துடனும் மந்த மான சூழ்நிலையிலும் காணப்படுவதால் சம்பா நெல் சாகுபடி பயிர்களில் குலை நோய்த் தாக்க வாய்ப்புகள் உள்ளன. தாக்குதலுக்கு உள்ளான வயல்களில் இலைகளின் மேல் சிறிய பழுப்பு நிற புள்ளிகள் உண்டாகும். புள்ளிகள் பெரிதாகும் போது 2 பக்கங்களிலும் விரிவடைந்து கண் வடிவத்தைப் பெறுகிறது. ஓரங்கள் பழுப்பு நிறமாகவும், உட்பகுதி சாம்பல் நிறமாகவும் காணப்படும். இலை மட்டுமன்றி தண்டு மற்றும் நெற்கதிரை தாக்குகின்றது. தண்டின் கணுக்களை தாக்கும் போது பழுப்பு நிற புள்ளிகள் தோன்றுகின்றன. புள்ளிகள் பெரிதாகும் போது திசுக்கள் அழுகி ஒடிந்து விடும். கழுத்து பகுதியை தாக்கும் போது கதிரை தாங்க முடியாமல் தண்டு ஒடிந்து விடும். இதை கட்டுப்படுத்த நடவு வயலில் நட்ட 30ம் நாள் ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனஸ் 20 கிலோ எருவுடன் கலந்து இடவேண் டும். நோய் கண்டவுடன் ஏக்கருக்கு 1 கிலோ சூடோ மோனஸ் 20 லிட்டர் நீருடன் கலந்து கைத்தெளிப்பானால் தெளிக்கவேண்டும். பூஞ்சான் கொல்லி மருந் தான கார்பென்டசின் 200 கிராம் அல்லது டிரைசைக்ளோசோல் 120 கிராம் அல்லது ஹெக்சனசோல் 5 இ.சி. 400 மி.லி. இவற்றில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். பூஞ்சாண கொல்லி மருந்துகள் வேளாண் விரிவாக்க மைய கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகள் மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி பயன்பெறலாம் என்றார்.

## புதுகை மாவட்டத்தில் சம்பா நெற்பயிரில் குலை நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை உழவர் பயிற்சி நிலையம் யோசனை

அன்னவாசல், : புதுக் கோட்டை மாவட்டத்தில் சம்பா நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையம் யோசனை தெரிவித்துள்ளது. இது குறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான், உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாக வெளி யிட்ட செய்திக் குறிப்பு: தற்போது வானிலை மேகமூட்டமாகவும், இரவில் பனிப்பொழிவாகவும் இருப்பதால் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் குலைநோய்த் தாக்குதல் காணப்படுகிறது. குறிப்பாக அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி வட்டாரங்களில் இது காணப்படுகிறது. இந்நோயின் அறி குறிகள் தென்பட்ட உடனேயே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். அறிகுறிகள்: நாற்றங்கால் தொடங்கி அனைத்து வளர்ச்சிப் பருவங்களிலும் நெற்பயிரை இந்நோய்த் தாக்குகிறது. தொடக்க நிலையில் இலையில் ஊதா கலந்த பச்சை நிறத்தில் சிறுசிறு புள்ளிகள் தோன்றிப் பின்னர் நீளவாக்கில் வளரும். நோய் வளர்ச்சியடைந்த நிலையில் புள்ளிகள் வெண்மை கலந்த சாம்பல் நிற மையப்பகுதியையும் பழுப்பு நிற ஓரங்களையும் கொண்டு 'கண்" வடிவில் காணப்படும். இது போன்று புள்ளிகள் இலை உறையின் மீதும் தண்டுப் பகுதியில் உள்ள கணுக்களின் மீதும் காணப்படும். பாதிக்கப்பட்ட கதிரின் கழுத்துப் பகுதி, கதிர் வெளிவரும் போது கருத்துச் சுருங்கி விடுகின்றது. கதிர்கள் உடைந்து தொங்கும். நெல் மணிகள் பதராக இருக்கும். இந்நோய் காற்றின் மூலமும், பாதிக்கப்பட்ட விதைகள் மூலமும் நெல் வயலில் காணப் படும் களைகள் மூலமும் பரவுகிறது. கட்டுப்படுத்தும் முறை: நோய் எதிர்ப்புத் திறன் உள்ள ஆடுதுறை 39 போன்ற ரகத்தை பயிரிடலாம். இந்நோய் எளிதில் தாக்கக் கூடிய சம்பா மசூரி போன்ற ரகங்களைத் தவிர்க்கலாம்.

வயலகளிலும் வரப்புகளிலுமுள்ள களைகளை அகற்ற வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே தழைச்சத்தை இட வேண்டும். தழைச்சத்தை மும்முறையாகப் பிரித்து இட வேண்டும். நடவு வயலில் இந்நோய் அறிகுறி தென்பட்டவுடன் ஏக்கருக்கு 120 கிராம் டிரைசைக்ளோசோல் 75 சதவிகிதம் டபிள்யூப்பி. அல்லது 400 கிராம் டிரைசைக் ளோசோல் 18 சதவிகிதம் மற்றும் மேன்கோசெப் 64 சதவிகிதம் கலந்த கலவை அல்லது 200 மி.லி. அசோஸ்க்சிஸ்ட்ரோபின் 23 எஸ்.சி. பூஞ்சாணக் கொல்லியைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். தேவைப் பட்டால், 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என்றனர்.

## இலைசுருட்டு புழுக்களை வேப்பெண்ணெய் கரைசல் தெளித்து கட்டுப்படுத்தலாம் மாநில ஆராய்ச்சி நிலைய இயக்குனர் தகவல்

அன்னவாசல், : சம்பா நெற்பயிரில் தோன்றும் இலைசுருட்டு புழுக்களை வேப்பெண்ணெய் கரைசல் தெளித்து கட்டுப்படுத்தலாம் என மாநில ஆராய் ச்சி நிலைய இயக்குனர் ஆலோசனை வழங்கி உள்ளார். இதுபற்றி குடுமியான் மலை மாநில பயிற்சி நிலைய இயக்குநர் வெள்ளைச்சாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தற்போது, பயிர் செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் இலைச்சுருட்டுப் புழு வின் தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. இலைச் சுருட்டுப் புழுவி னால் தாக்கப்பட்ட நெற்பயிரின் தோகைகள் நீளவாட்டிலும், பக்கவாட்டிலும் மடிக்கப்பட்டு சிறிய புழு உள்ளிருந்து இலையின் பச்சையத்தை சுரண்டி திண் பதால் இலைகள் வெண்மை யாக காணப்படும். பிறகு இலைத் தோகைகள் நிறம் மாறி காய்ந்துவிடும். அக்டோபர் முதல் டிசம்பர் வரை வெப்பநிலை 250 முதல் 320 சென்டி கிரேடு வரையிலும், காற்றின் ஈரப்பதம் 83 முதல் 90 சதம் வரை உள்ள சூழ்நிலையிலும், தழைச்சத்தான யூரியா வினை அளவுக்கதிகமாக இடுவதாலும், போரேட் மற்றும் கார்போபியூரான் குருணை மருந்தினை திரு ம்ப திரும்ப இடுவதாலும், புல் வகை களைகள்

அதிகம் உள்ள வயல்களிலும், நிழல் உள்ள இடங்களிலும் இலை சுருட்டுப் புழுவின் தாக்குதல் அதிகமாக இருக்கும். வளர்ச்சிப் பருவத்தில் 10 சத இலைகள் பாதிக்கப்பட்டாலும், கதிர் உருவாகும் தருணம் 5 சத இலைகள் பாதிக்கப்பட்டாலும் மரு ந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு 16 முதல் 20 இடங்களில் ஆங் கில எழுத்து (வு) டி வடிவ குச்சிகளை பறவை இருக்கைகளாக வைத்து கட்டுப்படுத்தலாம். டிரைகோகிராமா கைலோனிஸ் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சி.சி அளவில் வாரம் ஒரு முறையாக மூன்று முறை விட வேண்டும். இளம் பருவ புழுக்களை 5 சத வேப்பங்கொட்டை கரைசல் அல்லது 3 சத வேப்பெண்ணெய் கரைசல் தெளி த்து கட்டுப்படுத்தலாம். வளர்ந்த புழுக்களை புளு பெண்டியமைடு, கார் டாப் ஹைட்ரோ குளோ ரைடு, மோனோ குரோ டோபாஸ், கார்போசல் பான், தயோ மீத் தோசெம், ட்ரைஅசோபாஸ் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை ஏக்கருக்கு கைத்தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் நீரிலும், விசைத் தெளிப்பானாக இருந்தால் 60 லிட்டர் நீரிலும் கலந்து தெளிக்க வேண்டும்.

## <u>பெரியாறு அணையில் 152 அடி நீர் தேக்க தீர்மானம்</u>

தேவாரம், : முல்லை பெரியாறு அணையில் 152 அடி தண்ணீரை தேக்க சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதற்கு சமத்துவ மக்கள் கட்சி பாராட்டு தெரிவித்துள்ளது. உத்தமபாளையம் ஒன்றிய சமத்துவ மக்கள் கட்சியின் கலந்தாய்வு கூட்டம், கோம்பையில் ஒன்றிய செயலாளர் மகிமைராஜ் தலைமையில் நடந்தது. பேரூர்செயலாளர் அழகுசுந்தரம் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் முருகன் பேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்கியதற்கு பாராட்டு தெரிவித்து கொள்கிறோம். சட்டப்பேரவையில் 152 அடி தண்ணீர் தேக்க கேரளா ஒத்துழைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியதற்கு முதல்வருக்கு

பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறோம். பெரியாறு அணைக்கு செல்லக்கூடிய பொதுப்பணித்துறை அதிகாரிகள், மத்திய பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கு தொடர்ந்து இடையூறு செய்வதை கேரளா அரசு நிறுத்திகொள்ள வேண்டும். தேவாரம் சார்ந்த மலையடிவாரத்தில் தொடர்ந்து காட்டுப்பன்றிகள் விளைநிலங்களை சேதப்படுத்தி வருவதை தடுக்க வனத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும். தேனிமாவட்ட காவல்நிலையங்களில் போலீசார் கூடுதலாக நியமிக்கவேண்டும்' என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், சுருளியப்பன், செயலாளர்கள் தேவாரம் பாரத், மணிகண்டன், வேல்முருகன், இளைஞரணி செயலாளர் ரஞ்சித்குமார், ராம்குமார், மோகன், தொண்டரணி செயலாளர் காளிமுத்து, ரமேஷ்கண்ணன், பிரபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பருத்தியில் பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண்துறை ஆலோசனை

திருச்சுழி, : திருச்சுழி, நரிக்குடி பகுதிகளில் பருத்தியை தாக்கிய பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர். இது குறித்து கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் ராஜேந்திரன் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறி இருப்பதாவது:- விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, நரிக்குடி, வீரசோழன் உள்பட பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருத்தியில் தத்துப்பூச்சி களின் பாதிப்பால் இலைகளின் ஓரம் காய்ந்தும் செடியின் வளர்ச்சி குன்றியும், காய்ப்புழுக்களின் பாதிப்பால் சப்பைகள் விரிந்தும் பூ மொட்டுக்கள் வயலில் உதிர்ந்து காணப்படும். மகசூல் பாதிப்பு பெருமளவில் இருக்கும் மேற்குறிப்பிட்ட பூச்சிகளைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த ரோகார் அல்லது

மோனோகுரோட்டோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 300மிலி வீதமும், இமிடாகுளோபிரிட் மருந்தினை ஏக்கருக்கு 40 மிலி வீதமும் தெநித்து கட்டுப்படுத்தலாம். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த உடனடியாக பருத்தி செடியில் நுனி கிள்ளிவிட வேண்டும். காய்ந்த விரிந்த மற்றும் கீழே விழுந்த சப்பைகள் மற்றும் பூ மொட்டுகளை சேகரித்து அழித்து விட வேண்டும். மேலும் பூச்சிக் கொல்லி மருந்துகளான எக்காலக்ஸ் அல்லது புரபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 800 மிலி வீதமும், குளோர்பைரி பாஸ் மருந்தினை ஏக்கருக்கு 500 மிலி வீதமும் தெளித்து கட்டுப்படுத்த லாம். இவ்வாறு கூறி உள்ளனர்.

## <u>செட்டிக்குளத்தில் ஒரே நாளில் 34 டன் சின்ன வெங்காயம் ரூ.7.85 லட்சத்திற்கு விற்பனை</u>

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் ஒரே நாளில் புதிய சாதனையாக 34 டன் சின்ன வெங்காயம் ரூ.7.85 லட்சத்திற்கு ஏலமுறையில் விற்பனையானது. இதுகுறித்து பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்திருப்பதாவது: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் கடந்த 4ம்தேதி திறந்தமுறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் லாடபுரம், நக்கசேலம், மங்கூன், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, சிறுவாச்சூர், மாவலிங்கை, எசனை, லாடபுரம், பெரகம்பி, வாலையூர் ஆகிய கிராமங்களைச்சேர்ந்த 155 விவசாயிகள் தங்களது வயல்களில் விளைந்த சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். பொள்ளாச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, ஒட்டன்சத்திரம், மணப்பாறை, செட்டிக்குளம், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவயலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 22 வியாபாரிகள் கலந்துகொண்டு, 549

மூட்டை, அதாவது 34,396 கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். அன்றைய தினம் சின்ன வெங்காயம் அதிகபட்சம் கிலோ ரூ.52க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.23க்கும் விற்பனையானது. இதன் மூலம் ரூ.7.85லட்சத்திற்கு விற்பனை நடைபெற்றது. விற்கப்பட்ட வெங்காயத்திற்கு உரிய பணம் வியாபாரிகள் மூலம் அங்கேயே விவசாயிகளிடம் வழங்கப்பட்டது. இந்த வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்று கிழமைகளில் சின்ன வெங்காயத்திற்கான ஏலம் நடைபெற்று வருகிறது. எனவே விவ சாயிகள் தங்களது வெங்காய விளை பொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம் பிரித்து வரும் 9ம்தேதி, கொண்டுவந்து விற்பனை செய்து பயன் பெறலாம். ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்காக விவசாயிகள் எந்தவொரு கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. எனவே தமிழகத்திலேயே அதிகம் உற்பத்தியாகும் பெரம்பலூர் மாவட்ட சின்ன வெங்காய ஏல விற்பனையில் அனைத்து மாவட்ட சின்ன வெங்காய வியாபாரிகளும் கலந்துகொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>சம்பா நெற்பயிரில் குலை நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் உதவி இயக்குனர் யோசனை</u>

திருமானூர், : சம்பா நெற்பயிரில் குலை நோய் தாக்குதலை கட்டுபடுத்த திருமானூர் வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார். திருமானூர் வேளாண் உதவி இயக்குனர் பாபு ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: திருமானூர் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சுமார் 7,500 ஹெக்டேர் பரப்பில் கோ.43, கோ 50, சாவித்திரி மற்றும் பிபிடி 5,204 நெல் ரகங்களை பயிரிட்டுள்ளனர். தற்போது பனி அதிகமாக பொழிவதால், நெல்லில் குலை நோய் தாக்குதல் காணப்படும். அதனை ட்ரைசைக்ளோசோல் 75 டபிள்யூ பி 120 கிராம் அல்லது கார்பென்டிசிம் 100 கிராம் மருந்தினை கலந்து கை

தெளிப்பான் மூலம் கலந்து தெளித்து நோயினை கட்டுபடுத்தலாம். மேலும், இந்த சீதோஷ்ண நிலையில், நெல் பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் ஆனை கொம்பன் தாக்குதல் தென்படுகிறது. மேலும் பரவாமல் இருக்க சரியான அளவு யூரியாவுடன் வேப்பம் புண்ணாக்கை கலந்து இட வேண்டும். வயலில் பழைய தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏக்கருக்கு ட்ரைசாபாஸ் 40இசி 250 மிலி அல்லது பிப்ரோனில் 5 சதவீதம், எஸ்சி 500 மிலி அல்லது தையோமித்தாசம் 25 டபிள்யூ ஜி 40 கிராம் மருந்தை கலந்து 200 மிலி நீரில் கலந்து தெளித்து கட்டுபடுத்தலாம். ஆனை கொம்பன் தாக்கப்பட்ட வயலில் பிப்ரோனில் 5 சதவீதம், எஸ்சி 500 மிலி அல்லது தையோமித்தாசம் 25 டபிள்யூ ஜி 40 கிராம் மருந்தை கலந்து தெளித்து கட்டுபடுத்தலாம் என வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## <u>ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி திருப்புறம்பியத்தில் நடந்தது</u>

கும்பகோணம், : சாக்கோட்டை உழவர் பயிற்சி மையம் சார்பில் திருப்புறம்பியத்தில் 50 விவசாயிகளுக்கு 2 நாள் பயிற்சி நடைபெற்றது. தஞ்சை மாவட்டம் திருப்புறம்பியம் கிராமத்தில் கடந்த 2 மற்றும் 3ம்தேதிகளில் உழவர் விவாதக் குழுவினருக்கு விவசாயம் தொடர்பாக இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. முதல் நாள் பயிற்சியில் கும்பகோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் லட்சுமிகாந்தன் நெல் சாகுபடி, பயறுவகை சாகு படி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். உழவர் பயிற்சி மைய வேளாண்மை அலுவலர் கவிதா மண்மாதிரி எடுத் தல், திருந்திய நெல் சாகுபடி முறை, எள் சாகுபடி முறை, உயிரியல் காரணிகள் பயன்படுத்தல் குறித்து பயிற்சி அளித்தார். வேளாண் வணிகம் தொடர்பாக வேளாண்மை அலுவலர் நாகராஜன் பயிற்சியில் பங்கேற்று அத்துறை தொடர்பான திட்டங்களை எடுத்துரைத்தார். தோட்டக்கலைத்துறையில், உதவி வேளாண்மை

அலுவலர் அருள்தாஸ், வீட்டு காய் கறித் தோட்டம் அமைத்தல் குறித்தும் விளக்கமாக பேசி னார். மானிய விலையில் விவசாயிகளுக்கு விதை களையும் வழங்கினார். கும்பகோணம் வட்டார அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சக்கரவர்த்தி அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். இரண்டாம் நாள் பயிற்சியில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் உதவிப் பொறியாளர் ரவிகிருஷ்ணன் பங்கேற்று துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், இயந்திரங்கள் பயன்படுத்தும் முறை குறித்து பயிற்சியளித்தார். பட்டு வளர்ச்சித்துறையில் இருந்து இளநிலை ஆய்வாளர் அய்யாத்துரை பட்டுப்புழு வளர்த்தல் குறித்து பயிற்சியளித்தார். நெற்பயிரில் மேலுரமாக இடும் யூரியாவுடன் ஜிப்சம், வேப்பம்புண்ணாக்கு கலந்து இடுதல், விதை நேர்த்தி செய்தல் போன்ற செயல் விளக்கங்கள் விவசாயிகளுக்கு செய்து காட்டப்பட்டது. உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் திருப்புறம்பியம் தியாகராஜன், கொத்தங்குடி குணேசகரன் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. முடிவில் வேளாண்மை துணை இயக்குநர் கிருஷ்ணகுமார் நன்றி கூறினார்.

## <u>நெல் விதைப்பண்ணை அமைத்தால் கூடுதல் லாபம் பெறலாம்</u>

ராமநாதபுரம், : நெல் விதைப்பண்ணை அமைத்து கூடுதல் லாபம் பெறலாம் என ராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். ராமநாதபுரம் மாவட்டத்தில் விதைக்கப்பட்ட நெல் மற்றும் சிறு தானிய பயிர்கள் 60 முதல் 75 நாட்கள் பயிராக உள்ளன. வேளாண் மைத் துறை மற் றும் தனியார் உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் மூலம் பெறப்பட்ட ஆதார விதைகளை கொண்டு மாவட்டத்தில் இதுவரை 292 ஹெக்டேரில் நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதார விதைகளை கொண்டு நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விதைத்த 35 நாட்கள் அல்லது பூப்பதற்கு 15 நாட்கள் இவற்றில் எது முன்னதாக வருகிறதோ அதற்குள் நெல்

விதைப்பண்ணை பதிவு செய்ய வேண்டும். விதைப்பண்ணைக்காக பராமரிப்பதினால் பயிர்களின் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிர்தல் மற்றும் கலப்படம் இல்லாத அதிக மகசூல், விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வாய்ப்புள்ளது. வேளாண்மைத் துறை மூலம் நெல் சாகுபடி செய்துள்ள விவ சாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின் கீழ் மூன்று கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் அந்தந்த கிராமப் பகுதிகளில் விவ சாயிகளுக்கு தங்களால் விளைவிக்கப்படும் தரமான விதைகளை உள்ளூர் விவசாயிகளுக்குள் பரிமாறிக் கொள்ள ஏதுவாகும். நெல் விதைப் பண்ணைகள் அமைத்து விதை உற்பத்தியாளர்களாக மாறுவதன் மூலம் அதிக லாபம் பெற வாய்ப்புள்ளது. நெல் மற்றம் சிறுதானியங்களுக்கு வயலாய்வுக் கட்டணம், விதைப்பு அறிக்கை பதிவுக் கட்டணம் மற்றும் விதை பரிசோதனைக் கட்டணம் ஒரு ஏக்கருக்கு ரூ.115 செலுத்த வேண்டும். விதைப்பண்ணை அமைப்பது தொடர்பாக கூடுதல் தகவல்களுக்கு ராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என விதைச் சான்று உதவி இயக்குநர் சேக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

## நவீன தொழில்நுட்பத்தில் சிறுதானிய பயிர் உற்பத்தி விவசாயிகளுக்கு பயிற்சி

பரமக்குடி, :பரமக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு சிறு தானிய பயிர் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. உலக வங்கி நிதியுதவியுடன் நீர், நிலவளத் திட்ட த்தை வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் பரமக் குடி வேளாண்மை ஆராய் ச்சி நிலையத்தில் சிறு தானியங்களை பரவலாக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக பரமக்குடி, போக லூர், முதுகுளத்தூர், கட

லாடி, கமுதி, திருப்புல்லாணி வட்ட விவசாயிகள் வேளா ண்மை இயக்குநர்களால் தேர்வு செய்யப்ப ட்டனர். நிலைய தலைவர் பேராசிரியர் சக்திவேல் தலைமை வகித்து, மாவட்டத்தில் பயிரிடப்படும் சிறு தானியங்கள் பற்றி விளக்கம் அளித்தார். உழவியல் துறை உதவி பேராசிரியர் ஜெயஸ்ரீனிவாஸ் சிறு தானியங்களின் சாகுபடி தொழில்நுட்பங்களை பற்றி கூறி னார். முனைவர் முத்து ராமு சிறு தானிய பயிர்களில் உள்ள உயர் விளை ச்சல் ரகங்கள் பற்றி விளக் கம் அளித்தார். வேளா ண்மை உதவி இயக்குநர் கண்ணையா சிறு தானிய பயிர்களில் உள்ள ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்தும் முனைவர் வீரணன் அருண்கிரிதாரி சிறு தானிய பயிர்களில் மதிப்பு கூட்டப்பட்ட பொ ருள்கள் தயாரிப்பது குறித்து விளக்கம் அளித்தனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள் தென்பொதுவக்குடியில் உள்ள சிறுதானியங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர். நிர்வாக இயக்குநர் ரமேஷ் சிறு தானியங்களை பதப்படுத்தி சந்தைப்படுத்துதல் குறித்து பேசினார். அங்கு விவாசாயிகளுக்கு சாமை பாயாசம் வழங்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை போத்திராஜ், மகாதேவி செய்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழ்நாட்டில் இன்று சில இடங்களில் மழை பெய்யும் என வானிலை அறிவிப்பு**




இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று திங்கட்கிழமை மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

பருவமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் நடைபெற்று வருகிறது. வழக்கமாக வடகிழக்கு பருவ மழை காலத்தில் 44 செ.மீ.மழையை சராசரியாக தமிழகம் பெறும். ஆனால் இந்த வருடம் 36.5 செ.மீ. மழையைத்தான் பெற்றுள்ளது. கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் மழை பெய்யவில்லை. தென் மாவட்டங்களில் போதிய அளவுக்கு மழை பெய்தபோதிலும், சென்னை உள்ளிட்ட வடமாவட்டங்களில் போதிய மழை பெய்யவில்லை. எனவே இன்னும் மழை பெய்யவேண்டும் என்று பொதுமக்களும் விவசாயிகளும் எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலையில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:- குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கைக்கு அருகே தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களிலும், தென் மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யும். நாளை (செவ்வாய்க்கிழமை) மழை வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்

பனி-குளிர்

தமிழ்நாட்டில் கடந்த ஒரு வாரமாக மாலை 6 மணிக்கு மேல் காலை 8 மணி வரை பனிபெய்கிறது. இதன்காரணமாக இரவில் குளிர் வாட்டி வதைக்கிறது.

## <u>விவசாயிகளின் குறைகளை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: கலெக்டர் சுரேஷ்குமார்</u>

கடலூர், விவசாயிகள் தெரிவிக்கும் குறைகளை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேளாண் அதிகாரிகளுக்கு கலெக்டர் சுரேஷ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>செயற்குழுகூட்டம்</u>

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கடலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் கடலூரில் நடைபெற்றது. இதற்கு கடலூர் மாவட்ட கலெக்டரும், உணவு பாதுகாப்பு இயக்க தலைவருமான சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் 2013-14-ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட அரிசி, பயறுவகை, வணிக பயிர் கரும்பு ஆகிய இயக்கங்களின் சாதனைகள் குறித்தும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரிசி, வணிகபயிர் கரும்பு குறித்த செயல் திட்டம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இதில் வேளாண்மை இணை இயக்குநர் தனசேகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இளங்கோ, துணை இயக்குநர் ஹரிதாஸ், நபார்டு வங்கியின் உதவி பொதுமேலாளர் ராஜகோபால், முன்னோடி வங்கி மேலாளர் சேதுராமன், விவசாயிகள் ரவீந்திரன், கல்யாணசுந்தரம், கார்மாங்குடி வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

<u>உரியகாலத்தில்...</u>

முன்னதாக கலெக்டர் சுரேஷ்குமார் பேசும்போது பருவத்தே பயிர் செய் என்ற பழமொழிக்கேற்ப விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட் களை உரிய காலத்தில் வழங்க வேண்டும். அதேபோல விவசாயிகள் தெரிவிக்கும் குறைகள் குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். பண்ணை குட்டைகள் அமைத்தல், விவசாயத்தில் வெற்றிகரமாக சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் நிலங்களை மற்ற விவசாயிகளை அழைத்து சென்று காண்பித்து ஊக்கப்படுத்த வேண்டும் என்றார்.

## <u>சாமி எம்.எல்.ஏ. முயற்சியால் மேலூர் பகுதிக்கு கால்வாயில் தண்ணீர் திறப்பு</u>



மேலூர் பகுதிக்கு சாமி எம்.எல்.ஏ. முயற்சியால் தண்ணீர் திறக்கப்பட்டது.

நெற்பயிர்கள்பாதிப்பு

மதுரை மாவட்டம் மேலூர் பகுதி பெரியாறு பாசனத்தின் கடைசி பகுதியாகும். ஒருபோக விவசாய பகுதியான இங்கு 22 ஆயிரம் ஏக்கரில் நெல் விவசாயம் நடைபெறுகிறது. இங்கு தற்போது நெல்பயிரிட்டு வளரும் தருவாயில் உள்ளன. மேலூர், எட்டிமங்கலம், நாவினிப்பட்டி , தனியாமங்கலம், கீழையூர், கீழவளவு, இ. மலம்பட்டி, சருகுவலயபட்டி , மட்டங்கிபட்டி , புலிமலைப்பட்டி, உறங்கான்பட்டி, குறிச்சிப்பட்டி, அம்பலகாரன்பட்டி, கோட்டனத்தம்பட்டி, கொட்டகுடி, பதினெட்டாங் குடி, பனங்காடி, திருவாதவூர், பூஞ்சுத்தி, ஆமூர், மருதூர், டி.மாணிக்கம் பட்டி, தி.வெள்ளாளபட்டி, தெற்குதெரு, அ.வள்ளாலபட்டி, பூசாரிப்பட்டி, பெருமாள்பட்டி உட்பட அனைத்து பகுதிகளிலும் கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டதால் தண்ணீர் இன்றி நெற் பயிர்கள் பாதிப்படைவதாக விவசாயிகளும், பொதுமக்களும் மேலூர் தொகுதி எம்.எல்.ஏ., சாமியிடம் தெரிவித்தனர்.

தண்ணீர்திறப்பு

பொதுப்பணித்துறை அமைச்சரிடம் தொடர்புகொண்டும், கலெக்டர் மற்றும் அதிகாரிகளிடம் சாமி எம்.எல்.ஏ. மேலூர் பகுதிக்கு உடனடியாக போதிய அளவு கால்வாயில் தண்ணீர் திறக்கவேண்டும் என வலியுறுத்தி னார். அதன்படி நேற்று மேலூர் பகுதியில் உள்ள அனைத்து கால்வாய்களிலும் தண்ணீர் திறக்கப்பட்டது. அனைத்து கிராம விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

## ஆத்தூர் புதுப்பேட்டையில் ரூ.20 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் கொங்கணாபுரத்தில் ரூ.5½ லட்சத்திற்கு நிலக்கடலை விற்பனை



ஆத்தூர் புதுப்பேட்டையில் நடந்த ஏலத்தில் 700 மூட்டை மஞ்சள் ரூ.20 லட்சத்திற்கும், கொங்கணாபுரத்தில் நடந்த ஏலத்தில் நிலக்கடலை ரூ.5½ லட்சத்திற்கும்விற்பனையானது.

மஞ்சள்ஏலம்

ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் விரலி ரக மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 39 முதல் ரூ.7 ஆயிரத்து 499 வரை ஏலம் போனது. உருண்டு ரக மஞ்சள் ரூ.4 ஆயிரத்து 89 முதல் ரூ.6 ஆயிரத்து 719 வரையும், பனங்காலி ரக மஞ்சள் ரூ.4 ஆயிரத்து 389 முதல் ரூ.14 ஆயிரத்து 39 வரையும் குவிண்டால் ஒன்றுக்கு விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த ஏலத்தில் மொத்தம் 700 மூட்டைகளில் கொண்டு வரப்பட்ட மஞ்சள் ரூ.20 லட்சத்திற்குஏலம்போனது.

நிலக்கடலை

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் நேற்று நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. இதில் பல பகுதிகளில் இருந்து விவசாயிகள் நிலக்கடலை மூட்டைகளை கொண்டு வந்து கலந்து கொண்டார்கள். ஏலத்தில் மொத்தம் 400 நிலக்கடலை மூட்டைகள் ரூ.5½ லட்சத்துக்கு ஏலம் போனது. ஈர நிலக்கடலை 60 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ.850 முதல் ரூ.1,667 வரையும், உலர்ந்த மூட்டை ரூ.1,250 முதல் ரூ.1,900 வரை ஏலம் போனது. ஏலத்தில் வெளியூர் வியாபாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நெல்லைக்கு 2,651 டன் யூரியா உரம் வந்தது



நெல்லைக்கு 2,651 டன் யூரியா உரம் நேற்று ரெயில் மூலம் கொண்டு வரப்பட்டது.

யூரியாஉரம்

நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து, விவசாய பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன. முக்கிய தேவையான யூரியா உரம் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதையடுத்து வெளிநாட்டில் இருந்தும், மராட்டிய மாநிலத்தில் இருந்தும் யூரியா உரம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரெயில்கள் மூலம் யூரியா உரம் கொண்டு வரப்பட்டு, கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாகவும், தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

2,651டன்

இந்த நிலையில் 7-வது முறை யாக நெல்லைக்கு மேலும் 2,651 டன் யூரியா உரம் நேற்று ரெயிலில் கொண்டு வரப்பட்டது. வெளிநாட்டில் இருந்து காரைக்கால் துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யப்பட்ட 2,651 டன் யூரியா உரம், சரக்கு ரெயில் மூலம் நெல்லை சந்திப்பு ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதில் 351 டன் குமரி மாவட்டத்துக்கும், 1,300 டன் தூத்துக்குடி மாவட்டத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. மீதம் உள்ள 1,000 டன் உரம் நெல்லை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப் பட்டன. இதுபற்றி வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், ‘‘நெல்லை மாவட்ட விவசாய பணிகளுக்கு நடப்பு ஆண்டில் மொத்தம் 10 ஆயிரம் டன் யூரியா உரம் தேவை ஆகும். அதில் இதுவரை 6,500 டன் உரம் வரவழைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. தற்போது 7-வது முறையாக மேலும் 1,000 டன் உரம் நெல்லை மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைத்து உள்ளோம். இதே போல் மேலும் யூரியா உரம் படிப்படியாக கொண்டு வரப்படும்’’ என்றார். ரெயில் நிலையத்தில் இருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு உரம் அனுப்பி வைக்கும் பணிகளை இணை இயக்குனர்

சந்திரசேகரன், உதவி இயக்குனர் கஜேந்திரபாண்டியன், மண்டல மேலாளர் பாலகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

**<u>கால்நடைகளுக்கு சிகிச்சை</u>**



நெல்லை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் கால்நடை ஆராய்ச்சி துறை, தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை, கால்நடை அபிவிருத்தி முகமை, கீழக்கலங்கல் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் இணைந்து இலவச கால்நடை சிகிச்சை முகாமை நடத்தின. நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ரமேஷ் தலைமை தாங்கினார். கீழக்கலங்கல் பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் நாகூர்மீரான் வரவேற்று பேசினார். பால்வள துணை பதிவாளர் கஸ்தூரி பாய், ஆவின் பொது மேலாளர் லட்சுமணப்பிள்ளை, உதவி பொது மேலாளர்கள் தியானேஷ் பாபு, சொர்ணகுமார், கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர் செல்லப்பாண்டியன், பஞ்சாயத்து தலைவி இந்திராணி உள்பட பலர் கலந்து கொண்டனர். டாக்டர்கள் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். செயலாளர் செய்யது இப்ராகிம்ஷா நன்றி கூறினார்.